# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

# OS. No.245/2020

**16.10.2025**

## P.W.1- தனபாலசந்திரன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வா.சா.ஆ.2 பட்டா எனது தகப்பனார் பெயரில் உள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட நிலம் அப்படியே உள்ளது. எனது பெயரில் பட்டா இல்லை, அப்பா பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது. வா.சா.ஆ.2ல் கண்ட சொத்தான புல எண்.200/14ஏ உள்ள 15.15 ஏர்ஸ் எனது அனுபவத்தில் உள்ளது. வா.சா.ஆ.2ல் கண்ட சொத்தை பொறுத்து ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பட்டாவானது வாதி, 1ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் 4வது பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 577 பட்டாவில் கண்ட சொத்துக்கள் முழுமையாக உள்ளது. மேற்படி சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்றால் விவசாயம் செய்யாமல் நானும், எனது தங்கையும் மேற்பார்வை செய்து வருகிறோம். மேற்படி 577 பட்டாவனது சுமார் 6 ஏக்கர் நிலத்திற்கு உள்ளது. வா.சா.ஆ.4 பட்டா எண்.3001 எனக்கு பாத்தியப்பட்டது கிடையாது. வா.சா.ஆ.4 பட்டாவானது 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்பதாலும், மேலும் 5 நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளதாலும் அதை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ,4ல் கண்ட வீரத்தேவர் மகன் ராஜா என்பவர் எனது பெரியப்பா மகன் ஆவார். அவருக்கு அதில் பாத்தியம் இல்லை. ராஜாவை பிரதிவாதியாக வழக்கில் சேர்க்கவில்லை. ராஜா வா.சா.ஆ.4ல் கண்ட அவர் வாங்கிய 21 சென்டினை சௌந்திரபாண்டி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார். ராஜா 21 சென்டினை எனது அண்ணன் ஜெயபாலசந்திரன் உயிருடன் இருந்தபோது கிரையம் வாங்கிய சொத்தாகும். வழக்கிற்கு முன்னரே கிரையம் வாங்கிவிட்டார். வா.சா.ஆ,5 பட்டாவில் கண்ட கூல்மாயன் யார் என்றால் மேற்படி பட்டாவில் கண்ட சொத்தினை கிரையம் வாங்கியவர் ஆவார். கூல்மாயன் வா.சா.ஆ.5ல் கண்ட சொத்தினை 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்றார். ராஜா,

கூல்மாயன் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் வா.சா.ஆ.8 ஆக ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.8 ஜெராக்ஸ் நகலை கூல்மாயன் என்னிடம் கொடுத்தார். வா.சா.ஆ.8 ஆவணத்தை பதிவு செய்த பிறகு சுமார் 3 மாதங்கள் கழித்து அதனுடைய ஜெராக்ஸ் நகலை கூல்மாயன் என் வசம் ஒப்படைத்தார். வா.சா.ஆ.8 ஆவணத்தில் என்னென்ன சொத்துக்கள் கிரையம் செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. கிரையம் செய்யப்பட்ட நிலத்தில் மொத்தம் 50 சென்டு நிலம் இருந்தது. வா.சா.ஆ.8 ஆவணத்தை யார் யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் தெரியாது. மீண்டும் சாட்சி 1 முதல் 3 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்ததாக கூறுகிறார். மேற்படி ஆவணத்தில் வாய்மொழியாக பிரித்து அனுபவம் செய்து வருவதாக எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அவர்கள் எழுதிக்கொடுத்துள்ளார்கள், பாகம் பிரிக்கவில்லை. மேற்படி ஆவணத்தில் மாயாண்டியின் சுயார்ஜியதிமாக கிரையம் வாங்கிய சொத்தினையும் சேர்த்து எழுதிக்கொடுத்துள்ள விவரம் தெரியும், மேற்படி மாயாண்டிக்கு மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்திற்கு சம்மந்தமில்லை. வா.சா.ஆ.8 ஆவணத்தில் மாயாண்டி கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் 27.06.1983ம் தேதிய கிரைய ஆவணத்தை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் பார்க்கவில்லை. வா.சா.ஆ,8ல் கண்ட 50 சென்டு நிலம் எனக்கோ, எனது முன்னோர்களுக்கோ பாத்தியம் என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 பட்டாவில் முத்தனத்தேவருக்கு 15.15 ஏர்ஸ் மட்டும் பாத்தியம் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ,2ல் உள்ள ஒச்சாத்தேவர் மகன் முத்தனத்தேவர் எனது தகப்பனார் கிடையாது. எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் லட்சுமணத்தேவர் ஆவார். புல எண்.200-14-யில் லட்சுமணத்தேவர் மகன் முத்தனத்தேவர் பெயரில் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் அவரது பெயர் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.6ல் கண்ட கருப்பு மகன் சௌந்திரபாண்டி என்பவர் ராஜாவிடமிருந்து கிரையம் வாங்கிய நபர் ஆவார். மேற்படி சௌந்திரபாண்டியை இவ்வழக்கில் 5வது பிரதிவாதியாக சேர்த்துள்ளேன். வேறு நபர்கள் கிரையம் வாங்கிய ஆவணத்தை பொறுத்து பிராதில் எங்களது பாகத்தை கட்டுப்படுத்தாது என்றோ, செல்லத்தக்கதல்ல என்று குறிப்பிட்டு பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.9 4ம் பிரதிவாதிக்கு, நான் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.9 ஆவணம் 29.08.2020ல் எனது சகோதரிக்கு எதற்காக செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் எனது தகப்பனார் காலத்திலேயே ஆவணத்தில் கண்ட சொத்தானது எனது தகப்பனாரால் எனது சகோதரிக்கு ஒதுக்கப்பட்டது என என் சகோதரி என்னிடம் கேட்டுக்கொண்டதால் எழுதிக்கொடுத்தேன். அதற்கு எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த ஆவணம் என் வசம் உள்ளது. பிராதிலோ, வா.சா.ஆ.9 ஆவணத்திலோ மேற்படி விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ,9 ஏற்படுத்தப்பட்ட அன்றே எனது சகோதரியிடமிருந்து அதே சொத்தை அதே தேதியில் நான் எழுதி வாங்கினேன் என்றால் எழுதி வாங்கவில்லை. வா.சா.ஆ.9 ஆவணத்திற்கு பதிலாக நான் என்ன எழுதி வாங்கினேன் என்றால் என் சகோதரி, எனது அண்ணன் மக்களுக்கு எழுதிக்கொடுத்தது போல் மற்ற சொத்துக்களில் எனக்குள்ள பங்கினை எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தை தான் வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்துள்ளேன். நான், 4ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.9ல் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தை போன்று 1 முதல் 3 பிரதிவாதிகளும் 4ம் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்துள்ளார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகள், 4ம் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்ததை பிராதில் கூறவில்லை. எனது அப்பா ஏற்கனவே எழுதி வைத்ததை போன்று நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் 4ம் பிரதிவாதிக்கு சேர வேண்டிய சொத்தினை பொறுத்து ஆவணங்கள் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 4ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.10ல் கண்ட சொத்தை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் எந்த வில்லங்கமோ, கிரையமோ 3ம் நபர்களுக்கு செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10ல் கண்ட சொத்தை பொறுத்து நான் எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து கொள்ளவில்லை. வா.சா.ஆ.10ல் கண்ட சொத்தானது எனது தகப்பனாரால் எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தை பற்றி கிரையம் ஏற்படுத்திய 3 மாதங்களுக்குள் தெரிந்துகொண்டேன். வா.சா.ஆ.11 ஆவணத்தை கோட்டைச்சாமிக்கு, எனது சகோதரர் ஜெயபாலசந்திரன் எழுதிக்கொடுத்தார். வா.சா.ஆ.11 ஏற்பட்ட 3

மாதங்களுக்குள் ஏன் வழக்கு போடவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆவணம் எனது சகோதரருக்கு, எனது தகப்பனாரால் ஒதுக்கப்பட்ட சொத்தினை பொறுத்து அவர் கிரையம் கொடுத்ததால் அவர் உயிருடன் இருந்ததால் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனது சகோதரர் மருத்துவராக இருந்ததால் அவர் மதுரைக்கு குடிபெயர்ந்தார் என்றால் சரிதான். நான் உசிலம்பட்டிக்கு புலம்பெயர்ந்து 37 வருடங்கள் ஆகிவிட்டது. விவசாய காரணங்களுக்காக நான் எங்கள் ஊருக்கு சென்றுவருவது வழக்கம். 17.09.2020ல் பாகம் கேட்டு வா.சா.ஆ.12 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஞாபகமில்லை. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் தாவா சொத்துக்கள் அனைத்திற்கும் அனுப்பவில்லை என்றாலும், குறைந்த சொத்திற்கும் மட்டும் தான் அனுப்பினேன் என்றால் சரிதான். விற்பனை செய்த சொத்துக்களை பொறுத்து மட்டுமே பாகம் கேட்டு அறிவிப்பு அனுப்பினேன். வா.சா.ஆ.12 அறிவிப்பிற்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் பதிலறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். மேற்படி பதிலறிவிப்பில் வாக்கரால் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றும், அவசியப்பட்டால் ஆவணம் எழுதிக்கொள்வோம் என ஒப்புக்கொண்டு பிரதிவாதிகள் பதிலறிவிப்பில் கூறியுள்ளதை தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.14 பதிலறிவிப்பு கிடைத்தபின்பு 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் ஆவணங்கள் ஏற்படுத்திக்கொள்ள நான் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பாக சொத்தினை விற்பனை செய்யவிடக்கூடாது என்ற எண்ணத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் பிரிக்கப்படாத சொத்தை விற்க கூடாது என்ற எண்ணத்தில் வழக்கு போட்டுள்ளேன். தாவா சொத்தில் எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் சரிபாகம் பிரிக்கப்பட்டது என்றாலும், அதில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குரிய பாக சொத்தினை விற்பனை செய்வதிலிருந்து தடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் நான் பிராது தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ,15 முதல் 18 வரையிலான கிரைய ஆவணங்கள் அனைத்தும் எனது சகோதரியால் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மென்ட் ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் என்றால் சரிதான். பிராதில் எனது சகோதரிக்கு தாவா சொத்தில் பாகம் ஒதுக்கப்பட்டது என்றாலும், அவருக்கு தாவா சொத்துக்களில் பாகம் கிடையாது

என்று தெரிந்து கொண்டு சொத்திற்கு அவசியமில்லாத தரப்பினராக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அவசியமற்ற தரப்பினரை வழக்கில் சேர்த்த தோஷத்திற்கு வழக்கு உள்ளாகிறது என்றால் சரியல்ல. பிராதில் 4ம் பிரதிவாதி, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த தானபத்திரம், 1 முதல் 3 பிரதிவாதிகள், 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானபத்திரம் ஆகியவற்றை வழக்கில் நான் கூறவில்லை என்றாலும், ஆவணங்களை விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. உண்மை விவரங்களை மறைத்து வேண்டுமென்றே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளும், அவர்களிடம் கிரையம் வாங்கியவர்களையும் தொந்தரவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.16 17:40:30 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.